தினமலர்
13.11.2019,கோவைபக்கம்-2

# குத்துச்சண்டை போட்டி பள்ளி மாணவர்கள் 'பன்ச்!'

**கோவை, நவ. 13–**

கோவை மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கான குத்துச்சண்டை போட்டியில், வீரர்கள் தங்களின் முழு திறமையும் வெளிப்படுத்தி அசத்தினர்.

கோவை பள்ளி கல்வித்துறையின் சார்பில், கோவை வருவாய் மாவட்ட பள்ளி மாணவர்களுக்கான, குத்துச்சண்டை போட்டி, அரசூர் கே.பி.ஆர்., கல்லூரி வளாகத்தில் நேற்று நடந்தது.

14,17 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு, பல்வேறு எடை பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன. கோவை, பொள்ளாச்சியில் உள்ள, 11 குறுமைய பள்ளிகளை சேர்ந்த, 50க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்றனர்.

17 வயதுக்கு உட்பட்ட, 48–50 எடை பிரிவு மாணவர்கள் பிரிவில், மதர்லேண்ட் மெட்ரிக் பள்ளியின் சிவராமன், மேட்டுப்பாளையம் அரசு பள்ளியின் ஸ்ரீராம்; வெங்கடலட்சுமி பள்ளியின் சுந்தரராமன் ஆகியோர், முதல் மூன்று இடங்களை பிடித்தனர்.

50– 52 எடை பிரிவு, மதர்லேண்ட் மெட்ரிக் பள்ளியின் முருகவேல், சபர்பன் பள்ளியின் ராம்பிரசாத், மகாஜனா பள்ளியின் நவீன்குமார் ஆகியோர், முதல் மூன்று இடங்களை பிடித்தனர்.

52– 54 எடை பிரிவு, மதர்லேண்ட் மெட்ரிக் பள்ளியின் நவீன் பிரசன்னா, பி.கே.டி.பள்ளியின் நிர்மல், டிரினிட்டி பள்ளியின் நிதிஷ் ஆகியோர், முதல் மூன்று இடங்களை பிடித்தனர்.

போட்டியில் முதலிடம் பிடித்த வீரர்கள், மாநில அளவிலான போட்டிக்கு தகுதி பெற்றனர்.



■ கோவை அரசூரிலுள்ள கே.பி.ஆர்., கல்லூரியில் பள்ளி மாணவர்களுக்கான குத்துச் சண்டை போட்டி நடந்தது.

## இன்றைய விளையாட்டு

**கால்பந்து**



**இடம் :** வடவள்ளி, ராகவேந்திரா பள்ளி மைதானம்
**நேரம் :** காலை 10:00 மணி

**குத்துச்சண்டை**

**இடம் :** அரசூர், கே.பி.ஆர்., கல்லூரி
**நேரம் :** காலை 9:30 மணி.